1971 ஜூலை 19]

Sri Chandra Choodeswara Temple at Hosur

* 317. *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any representation has been received recently from the trustees of Sri Chandra Choodeswara Temple of Hosur in Dharmapuri district to lay a road to the hill temple of Sri Chandra Choodeswara; and

(*b*) if so, the estimated cost of the same and when it will be sanctioned?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: *(அ) ஆம்.*

(இ) இந்த வேலையின் மதிப்பீடு ஒரு லட்சம் ரூபாய். இந்த மதிப்பீட்டுக்கு விரைவில் ஒப்புதல் வழங்க, இந்து சமய அறநிலைய ஆணையாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளார்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether any representation has been received requesting sanction for renovation of the gopuram of Sri Chandrachoodeswara temple? If so, what is the action taken by this Government?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: *தலைவரவர்களே, அங்கே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் ரோடு போடுகின்ற வேலைக்கான மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமென்றுதான் வந்திருக்கிறது. கோபுர வேலை பற்றி எதுவும் வந்ததாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை.*

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister when the amount will be sanctioned for laying of roads?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: *26—9—1970-ம் தேதி அன்று அங்கிருக்கும் அறங்காவலர்களிடமிருந்து ஆணையருக்கு கோரிக்கை வந்த. 29—6—71-ம் தேதியன்று மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் ரோடு போடும் இடத்திற்குச் சென்று பார்வையிட்டு வந்துள்ளார். வெகு விரைவில் ஒப்புதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

ரேயான் நூல் விலையேற்றமும், கைத்தறி விசைத்தறி நெசவாளர் அல்லலும்.

திரு. கி. ஜெயராமன்: *பேரவைத் தலைவர் அவர்களே, "காப்புவரி ஆணைக் குழுவின் அறிக்கையை* (Tariff Commission) *அமுல்படுத்தாமல் காலதாமதம் செய்யும் மத்திய*